Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 881/2019 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW19 / PW12 |
| Name | : | சரஸ்வதி காவல் ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 13.05.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது உளுந்துார்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 01.05.2018ம் தேதி நான் ரெட்டிசாவடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொருப்பில் இருந்தபோது துாக்கணாம்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சக்திவேல் என்பவர் துாக்கணாம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 53/2018 சட்டப் பிரிவு 279, 337, 304 –அ இதசவின் படி அப்போதைய காவல் ஆய்வாளர் திரு. வெங்கடேசன் என்பவர் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக வைத்திருந்ததை எடுத்துக்கொண்டு சம்பவ இடமான ஸ்ரீ அன்னை ஹாலோபிளாக் இடத்திற்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை சாட்சிகள்

அழகானந்தன், கர்ணன் இவர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் உடன் புறப்பட்டு பாண்டிச்சேரி இந்திராகாந்தி மருத்துவமனை சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்வு செய்து பிரேத விசாரணை செய்து இறப்பின் காரணம் அறியும் பொருட்டு உள்ளிருக்கும் மருத்துவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் வைத்து திரு. சுகுமார் அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் தமிழரசன், த/பெ. குமார், கந்தன், முத்தரசு, ஐயப்பன், தமிழரசன் த/பெ. தெய்வலிங்கம், குமார், வைத்தியநாதன், ரவிக்குமார், கார்த்திக், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரி தமிழ்ச்செல்வன் த/பெ. தெய்வலிங்கம் என்பவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு தாமாக காவல் நிலையம் ஆஜரானவரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமாக PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட கீரோ ஸ்பிலண்டர் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தார். சிகிச்சையில் இருந்த தமிழ்ச்செல்வன் என்பவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கிய மருத்துவர் ஜெயஸ்ரீ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் பிரேத விசாரணை மேற்கொண்ட மருத்துவர் திரு. ராஜேஷ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சக்திவேல் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை விசாரித்ததில் இறந்துபோன நபர் தமிழ்வாசன் (எ) முருகன் என்பவருக்கு விபத்தில் தலையில் பலத்த காயம்

இறந்ததாகவும், எதிரி தமிழ்ச்செல்வன் என்பவருக்கும் அவருடன் வந்த அ.சா.1 தமிழரசன் என்பவருக்கும் கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டது. **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக மற்றும் அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் சட்டப் பிரிவுகள் 279, 337, 304–அ இதசவில் இருந்து சட்டப் பிரிவுகள் 279, 338, 304–அ இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டது. **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புலன் விசாரணை முடித்துவிட்டு வண்டியை ஓட்டி வந்த எதிரி தமிழ்ச்செல்வன் என்பவர் மீது சட்டப் பிரிவுகள் 279, 338, 304–அ இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

எழுதாத வெள்ளை தாளில் புகார்தாரரிடம் இருந்து கையொப்பம் வாங்கி புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்துபோன தமிழ்வாசன் மற்றும் அ.சா.1 தமிழரசன் ஆகியோரின் விபத்து பதிவேட்டில் இரண்டு இரு சக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.